**<u>தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்</u>**

செய்தி வெளியீட்டு எண். 53 /2025 நாள். 07.05.2025

**<u>செய்திக்குறிப்பு</u>**

**ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்), 2025.**

கால்நடை உதவி மருத்துவர், உதவி இயக்குநர் (நகர் மற்றும் ஊரமைப்பு), உதவி இயக்குநர் (புள்ளியியல்), உள்ளிட்ட 32 பதவிகளுக்கான 330 காலிப்பணியிடங்களை நிரப்ப, ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்)-க்கான அறிவிக்கை, தேர்வாணையத்தின் ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி இன்று (7.5.2025) வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் 13.5.2025 முதல் 11.6.2025 வரை இணையவழியில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்கலாம். தேர்வர்கள் தேர்வுக்கட்டணத்தை UPI மூலமாகவும் செலுத்தலாம். கணினி வழித் தேர்வு 20.7.2025 முதல் 23.7.2025 வரை நடைபெறும்.

**தொடர்ச்சியாக 10-வது முறையாக தேர்வாணையத்தின் ஆண்டுத்திட்டத்தில் குறிப்பிட்ட தேதியில் தேர்விற்கான அறிவிக்கை தேர்வாணையத்தால் தவறாமல் வெளியிடப்பட்டுள்ளது.**

ஒருங்கிணைந்த தொழில்நுட்ப பணிகள் தேர்வு (நேர்முகத் தேர்வு பதவிகள்) இரண்டு படிநிலைகளை உடையது (i) எழுத்துத் தேர்வு மற்றும் (ii) நேர்முகத் தேர்வு. எழுத்துத் தேர்வானது தமிழ் தகுதித் தேர்வு, பொதுஅறிவு மற்றும் பட்டப்படிப்பு / முதுநிலை பட்டப்படிப்பு தரத்தில் பாடத்தாள் ஆகிவற்றை கொண்டது. எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத் தேர்வில் பெறும் மதிப்பெண்கள் தேர்வர்களின் தரவரிசையை தீர்மானிக்கும். தேர்வர்களின் நலன் கருதி, முதன்முறையாக பாடத்திட்டத்தில் அலகு வாரியாக கேட்கப்படும் கேள்விகளின் எண்ணிக்கை இந்த அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**செயலாளர்**